| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்தலம் | **திரு ஆலவாய்** | பாடல் | **திருஞான சம்பந்தர்** | |
| பண்: | **பழம் பஞ்சுரம் - நாலடிமேல் வைப்பு** | ராகம்: | | |
| திருமுறை # | **3.108.1 - 3.108.11** | பாடல் | **வேத வேள்வியை, , , ,** | # 3956 - 3966 |

**எடுக்கின்ற வேலைகள் இனிதே முடிய பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்**

மதுரையில் சமணர்களுடன் வாதிடுவதற்குத் திருஞானசம்பந்தப் பெருமான் புறப்படும்பொழுது, சொக்கநாதப் பெருமானிடம் சென்று வணங்கிப் பாடியருளிய பதிகமாகும் இப்பதிகம்.

இது தாம் மேற்கொள்ளப் போகும் செயல் எளிதே இனிதே முடிந்திட சிவபெருமானின் அருளை வேண்டி இரக்கும் பதிகமாகும். தொழில், வியாபாரம் மற்றும் எந்தக் காரியத்தை தொடங்கினாலும், இப்பதிகத்தை அன்புடன் பாராயணம் செய்ய வேண்டும் ( வேறு சடங்குகள் செய்ய வேண்டாம் ). அந்தக் காரியம் இனிதே முடியும் என்பது பலர் கண்ட அனுபவ உண்மையாகும்.

இப்பதிகத்தைப் பாடியபின், சம்பந்தர் சமணர்களுடன் செய்த அனல்வாதம், புனல்வாதம் ஆகியவற்றில் வெற்றி பெற்றது நாம் யாவரும் அறிந்ததே ஆகும். ( சீர், அசை, தளை, பா வகை முதலியவற்றை மூல பாடத்தில் கண்டு கொள்ளலாம். பாமர மக்களும் படிக்க வேண்டும் என்பதால் பதம் பிரித்து அச்சிடப்பட்டுள்ளது ).

( தமிழ்வேதம் – சைவ சமயத் திங்களிதழ் – ஜூன் 2003 )
கு.முருகேச பிள்ளை

**1. வேத வேள்வியை நிந்தனை செய்துழல்**
**ஆதமில்லி அமணொடு தேரரை**
**வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே**
**பாதி மாதுடனாய பரமனே**
**ஞால[ம்] நின் புகழே மிக வேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே.**

(நிந்தனை=பழித்தல்; ஆதம் இல்லி=பயனற்றவர்கள்; அமணர்=சமணர்; ஞாலம்=உலகம்; ஆலவாய்=மதுரை)

தெளிவுரை = அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் தமிழ்வேதங்களைப் பழித்துத் திரியும் பயனற்ற சமணர்களையும் புத்தர்களையும் வாதிட்டு வெல்ல விரும்புகிறேன். உமாதேவியை இடப்பகத்தில் வைத்துள்ள பரம்பொருளே ! தங்களது திருவுள்ளம் யாதோ, உலகெங்கும் தங்களது புகழே விளங்க வேண்டும். திருவருள் புரிவீராக.

2. **வைதிகத்தின் வழி யொழுகாதவக்**
**கைதவம்முடைக் காரமண் தேரரை**
**எய்தி வாது செயத் திருவுள்ளமே**
**மைதிகழ்தரு மாமணி கண்டனே**
**ஞால[ம்] நின் புகழே மிக வேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே.**

(வைதிகம்=சான்றோர் நெறி; கைதவம்=வஞ்சனை; கார்=கரிய; தேரர்=புத்தர்; மை=கருமை; திகழ்=விளங்குகின்ற)

தெளிவுரை = சான்றோர் கூறிய நெறியில் நில்லாத சமணர்களையும், புத்தர்களையும் வாது செய்து வெற்றி பெற விரும்புகின்றேன். கருநீல மணி போன்ற கண்டத்தையுடைய பெருமானே! தங்களது திருவுள்ளம் யாதோ ? உலகம் முழுவதும் தங்கள் புகழே மிகுந்து விளங்க வேண்டும். திருவருள் புரிவீராக.

3. **மறைவழக்கம் இலாத மா பாவிகள்**
**பறிதலைக்கையர் பாயுடுப்பார்களை**
**முறிய வாது செயத் திருவுள்ளமே**
**மறியுலாம் கையில் மாமழுவாளனே**
**ஞால[ம்] நின் புகழே மிக வேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே.**

(மறைவழக்கம்= நன்னெறி; பறிதலைக்கையர்=கையினால் முடிபறிக்கப்பட்ட தலையினர்; பாயுடுப்பார்=பாயினை ஆடையாக அணிபவர், முறி=தோற்க; மறி=மான் கன்று )

தெளிவுரை = நன்னெறியில் செல்லாத பாவிகளாய்க், கையினால் முடிபறிக்கப்பட்ட தலையுடன் பாயை உடுத்தித் திரியும் சமணர்களை வாதிட்டு வெல்ல விரும்புகிறேன். மான்கன்றையும் மழுவையும் கைகளில் ஏந்தியுள்ள பரம்பொருளே ! தங்களது திருக்குறிப்பறியேன் ! தென் ஆலவாயில் ( மதுரை) எழுந்தருளியுள்ள முழுமுதற் பொருளே ! உலகம் முழுவதும் உமது புகழே மிகுந்து விளங்க வேண்டும்.

4. **அறுத்த அங்கம் ஆறு ஆயின நீர்மையைக்**
**கறுத்த வாழ் அமண் கையர்கள் தம்மொடும்**
**செறுத்து வாது செயத் திருவுள்ளமே**
**முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே**
**ஞால[ம்] நின் புகழே மிக வேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே.**

( அறுத்த=வரையறுக்கப்பட்ட; செறுத்து=எதிர்த்து; முறித்த=வளைந்த; கண்ணி=தலைமாலை; மதி=பிறைச்சந்திரன்)

தெளிவுரை = சான்றோர்கள் கூறிய நெறிமுறைகளைக் கொள்ளாத சமணர்களை எதிர்த்து வாது செய்யத் தேவரீரது திருவுள்ளம் யாதோ என அறிய விரும்புகிறேன். பிறை அணிந்த பெருமானே ! தென் ஆலவாயில் எழுந்தருளியுள்ள பரம்பொருளே ! உலகமெல்லாம் உமது புகழே மிகவேண்டும். திருவருள் புரிவீராக.

5. **அந்தணாளர் புரியும் அருமறை**
**சிந்தை செய்யா அருகர் திறங்களைச்**
**சிந்த வாது செயத் திருவுள்ளமே**
**வெந்த நீறது அணியும் விகிர்தனே**
**ஞால[ம்] நின் புகழே மிக வேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே.**

(அந்தணாளர்= அறவோர்; அருகர்=சமணர்; சிந்த=அழிய; திறம்=வலிமை)

தெளிவுரை = திருவெண்ணீறு அணியும் பரம்பொருளே ! அறவோர்களின் செயல்களை ஒரு பொருட்டாக மதியாத சமணர்களின் வலிமை குன்றும்படி வாது செய்யத் தேவரீரது திருவுள்ளம் யாதோ ? தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே ! உலகம் எங்ஙணும் உமது புகழே விளங்க வேண்டும்.

6. **வேட்டு வேள்வி செயும் பொருளைவிளி**
**மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை**
**ஓட்டி வாது செயத் திருவுள்ளமே**
**காட்டில் ஆனை உரித்த எம் கள்வனே**
**ஞால[ம்] நின் புகழே மிக வேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே.**

(வேட்டு=வேட்டல்;விரும்புதல்; விளி=இகழ்ச்சி; மூட்டுதல்=செய்தல்; சிந்தை=மனம்; முருட்டமண்=கருணையிலா சமணர்; ஓட்டி=நீக்க)

தெளிவுரை : யானையின் தோலை உரித்துப் போர்த்தி எம் உள்ளம் கவர்ந்தவரே ! சான்றோர்களின் நற்செயல்களைப் பழித்துப் பேசும் கருணையற்ற சமணர்களை விரட்ட வாது செய்ய எளியேன் விரும்புகின்றேன். தேவரீரது திருவுள்ளம் யாதோ ? ஆலவாயில் உறையும் எம் ஆதியே ! உலகமெல்லம் உமது புகழே மிக வேண்டும்.

7. **அழலது ஓம்பும் அருமறையோர் திறம்**
**விழலது என்னும் அருகர் திறத்திறம்**
**கழல வாது செயத் திருவுள்ளமே**
**தழல் இலங்கு திருவுருச் சைவனே**
**ஞால[ம்] நின் புகழே மிக வேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே.**

( அழல்=நெருப்பு; திறம்=தன்மை; விழல்=பயன்படாத ஒருவகைப்புல்; மருகர்=அமணர்; கழல=நீங்க; தழல்=நெருப்பு; சைவன்=சிவபெருமானார்)

தெளிவுரை : அறவோர்களின் அறச்செயல்கள் பயனற்றவை என எண்ணும் சமணர்களின் திறமைகளை அழிக்க வாதிட எண்ணுகிறேன். தேவரீரது திருக்குறிப்பு யாதோ ? ஆலவாயில் உறையும் எம் ஆதியே ! உலகில் உமது புகழே மிக வேண்டும்.

**8. நீற்று மேனியர் ஆயினர் மேலுற்ற**
**காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்**
**தேற்றி வாது செயத் திருவுள்ளமே**
**ஆற்ற வாள் அரக்கற்கும் அருளினாய்**
**ஞால[ம்] நின் புகழே மிக வேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே.**

(நீற்று மேனியர்= திருவெண்ணீறு அணிந்தவர்கள்; தேற்றி=தெளிவித்து; ஆற்ற=சிறந்த; வாள் அரக்கன்=இராவணன்)

தெளிவுரை : சிறந்த வாள் வீரனான இராவணனுக்கு நிறைய அருள் புரிந்தவரே ! திருநீற்றினைப் பூசியவர் மீது பட்ட காற்று வீசும் இடத்தில் கூட நிற்க மாட்டாத கொடுமையுடைய சமணர்களின் தவற்றினைத் தெளிவித்து வாது செய்யத் தேவரீரது திருவுள்ளம் யாதோ ? தென் ஆலவாயில் எழுந்தருளியுள்ள எம் ஆதிமூர்த்தியே ! உலகில் தங்கள் புகழே விளங்க வேண்டும்.

**9. நீலமேனி அமணர் திறத்து நின்**
**சீலம் வாது செயத் திருவுள்ளமே**
**மாலும் நான்முகனும் காண்பரியதோர்**
**கோல மேனிய தாகிய குன்றமே**
**ஞால[ம்] நின் புகழே மிக வேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே.**

(நீலமேனி=தூய்மையற்ற உடல்; சீலம்=சமய ஒழுக்கம்; குன்றம்=நெருப்பு மலை; கோல மேனி=அழகிய திருமேனி)

தெளிவுரை : திருமாலும் பிரமனும் காணமுடியாதவாறு அழலுருவாய் ( நெருப்பு மலையாய்) உயர்ந்து நின்ற சிவ பரம் பொருளே! தூய்மையில்லா உடலையுடைய சமணர்களோடு வாது செய்து உமது உயர்வினை வெளிப்படுத்த எண்ணம் கொண்டுள்ளேன். தேவரீரது திருவுள்ளம் யாதோ ? திருஆலவாயில் உறையும் எம் ஆதியே ! உலகமெங்கும் உமது புகழே விளங்க வேண்டும்.

**10. அன்று முப்புரம் செற்ற அழக நின்**
**துன்று பொற்கழல் பேணா அருகரைத்**
**தென்ற வாது செயத் திருவுள்ளமே**
**கன்ற சாக்கியர் காணாத் தலைவனே**
**ஞால[ம்] நின் புகழே மிக வேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே.**

(தென்ற= தோற்க; கன்ற= தன்மையற்ற; பேணுதல்=வணங்குதல்)

தெளிவுரை : முப்புரங்களை அழித்த அழகரே ! தங்களது திருவடிகளை நினையாத சமணர்களை வாதில் வெற்றி கொள்ளத் தங்களது திருக்குறிப்பு யாதோ ? தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே! உலகில் உமது புகழே விளங்க வேண்டும்.

**11. கூடல் ஆலவாய்க் கோனை விடை கொண்டு**
**வாடல் மேனி அமணரை வாட்டிட**
**மாடக் காழிச் சம்பந்தன் மதித்த இப்**
**பாடல் வல்லவர் பாக்கியவாளரே.**

(விடை கொண்டு = அனுமதி பெற்று; வாடல் மேனி=பட்டினியால் வாடிய உடல்)

தெளிவுரை = கூடல் ஆலவாயில் ( மதுரையம் பதியில் ) எழுந்தருளியுள்ள இறைவரை வணங்கி அனுமதி பெற்று, வாடல் மேனி அமணரை வெற்றி கொள்ள விரும்பும் சீர்காழியில் அவதரித்த ஞானசம்பந்தர் பாடிய இப்பதிகத்தை ஓத வல்லவர்கள் புண்ணியவான்களாவார்கள்.

( தமிழ்வேதம் - சைவ சமயத் திங்களிதழ் - சூன் 2003 )

கு.முருகேச பிள்ளை